இனிமையான குழந்தைகளே! இப்போது உங்களுக்கு தெய்வீக பார்வை கிடைத்துள்ளது - நீங்கள் அறிவீர்கள், இந்தப் பழைய உலகம் முடிந்துவிடப் போகிறது. அதனால் இதிலிருந்து மோகத்தை நீக்கிவிட வேண்டும். முழுமையாக சமர்ப்பணம் ஆக வேண்டும்.

கேள்வி: அழிவேயில்லாத தந்தை மீது யார் முழு சமர்ப்பணம் ஆகியுள்ளனரோ, அவர்களின் அடையாளம் என்னவாக இருக்கும்?

பதில்: அவர்கள் தங்களின் பைசா முதலியவற்றைத் தவறாகச் செலவு செய்ய மாட்டார்கள். பக்தி மார்க்கத்தில் தீபாவளி முதலியவற்றில் எவ்வளவு வெடிமருந்துகளை எரிக்கின்றனர்! அல்பகாலத்தின் குஷியைக் கொண்டாடுகின்றனர். நீங்கள் அறிவீர்கள், இவையனைத்தும் நேரத்தை வீணடிப்பது, பணத்தை வீணடிப்பது, சக்தியை வீணடிப்பதாகும். இங்கே நீங்கள் அந்த மாதிரி குஷியைக் கொண்டாடக் கூடாது. ஏனென்றால் நீங்களோ வனவாசத்தில் இருக்கிறீர்கள். நீங்கள் இந்த முள் நிறைந்த உலகத்தில் இருந்து மலர்களின் உலகத்திற்குச் செல்ல வேண்டும்.

பாடல்: உங்களை அடைந்த நாங்கள் உலகத்தை அடைந்தோம்.........

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான குழந்தைகள் பாடலின் பொருளைப் புரிந்து கொண்டீர்கள். இப்போது குழந்தைகள் நீங்கள் தந்தையை அடைந்து விட்டீர்கள். 5 விகாரங் களை வெல்வதற்கு, அதாவது மாயா மீது வெற்றி பெற்று உலகை வென்றவராக ஆவதற்கு உங்களுக்குத் தந்தை உதவி புரிகிறார். ஜெகத் என்பது முழு உலகையும் குறிப்பதாகும் என குழந்தைகள் அறிவார்கள், நாம் முழு ஜெகத்துக்கும் எஜமானர் ஆகப் போகிறவர்கள். எப்போது எஜமானர் ஆவீர்கள்? இராவண இராஜ்யம் முடிவடையும் போது. இராவணனை ஆண்டு தோறும் எரிக்கின்றனர். ஏனென்றால் சங்கமயுகத்தில் தந்தை வந்து ஆத்மாவின் தீபத்தை எழச்செய்து சத்யுகத்தின் எஜமானராக ஆக்குகிறார். தசராவுக்குப் பிறகு தீபாவளி நாளில் மனிதர்கள் மிக நல்ல-நல்ல ஆடைகள் அணிகின்றனர். அதிகமாக லட்சுமி-நாராயண், இராதை-கிருஷ்ணர் மற்றும் தேவிகளின் ஆலயத்திற்குச் செல்கின்றனர். ஆனால் தேவிகள் மற்றும் லட்சுமி-நாராயணர் பற்றி அவர்களுக்குத் தெரியாது. தேவிகள் என்றால் சிவசக்திகள், பிராமணிகள். தேவிகளின் கையில் அஸ்த்ர-சஸ்த்ரங்கள் (ஆயுதங்கள்) காட்டுகின்றனர். உண்மையில் தேவி களின் கையில் எந்த ஓர் அஸ்த்ர-சஸ்த்ரமும் கிடையாது. அவை குப்தமாக உள்ளன. இராவணன் மீது வெற்றி பெறுகிறீர்கள் என்றால் உங்களின் அரைக்கல்பத்தின் குஷி நிரந்தரம் ஆகி விடுகிறது. இப்போது நீங்கள் குஷியைக் கொண்டாட மாட்டீர்கள். இது ஒன்றும் தீபாவளி கிடையாது. ஏனென்றால் இன்று தீபத்தை ஏற்றி வைக்கின்றனர். நாளை அணைந்து விடுகிறது. தசராவும் ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடிக் கொண்டே இருக்கின்றனர். பிராமணர்கள் நீங்கள் தங்களின் வீடுகளில் தீபம் எதுவும் ஏற்றுவதில்லை. கோவில்கள் முதலியவற்றிலோ தீபம், மின்விளக்குள் முதலியவற்றை ஏற்றி வைக்கின்றனர். தீபாவளி, தசரா என்பதெல்லாம் என்ன என்று மனிதர்களுக்குத் தெரியாது. அந்தச் சமயம் பாரதம் முழுவதுமே புதியதாக ஆகி விடுகிறது. தீபம் முதலியன ஏற்றி வைப்பதெல்லாம் பக்தி மார்க்கமாகும். பக்தி மார்க்கத்தில் எவ்வளவு பணத்தை வீணடிக்கின்றனர்! அந்த

நாளில் எவ்வளவு வெடிமருந்துகளை எரிக் கின்றனர்! நேரம் வீண், பணம் வீண், சக்தி அனைத்தையும் வீணடித்துக் கொண்டுள்ளனர். இது முள் நிறைந்த காடு. அனைவரும் காட்டுவாசியாக ஆகி விட்டுள்ளனர். நீங்களும் முதலில் அப்படித் தான் இருந்தீர்கள். எதையும் புரியாமல் இருந்தீர்கள். சத்யுகத்தில் வீண் செலவு செய்ய மாட்டீர்கள். இங்கோ வீண் செலவு நிறைய உள்ளது. தான-புண்ணியம் செய்வதாலும் அல்பகால பலன் கிடைக்கிறது. நீங்கள் அறிவீர்கள், நாம் அழியாத தந்தை மீது பலியாகி இருக்கிறோம் என்றால் நம்முடைய அனைத்தும் அழியாததாகி விடுகிறது. பழைய சரீரத்தை விட்டுப் புதியதை எடுத்துக் கொள்கிறோம். குழந்தைகள் நீங்கள் மோகத்தை வென்ற இராஜா வின் கதையோ கேட்டிருக்கிறீர்கள் இல்லையா? இந்தக் கதை சத்யுகத்திற்காக இல்லை. ஏனென்றால் அங்கே அகால மரணம் ஏற்படுவதில்லை. இது உதாரணம் தருவதற்காக மட்டும் கதை உருவாக்கியுள்ளனர் - அந்தச் சமயத்தில் அனைவரும் பற்றற்றவர்களாக, மோகத்தை வென்றவர்களாக இருக்கின்றனர். சரீரத்துடன் கூட பழைய உலகத்திலிருந்து மோகத்தை அழித்து விட வேண்டும். ஏனென்றால் நீங்கள் புது உலகத்திற்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள். பழைய உலகத்திடம் யாருக்காவது மோகம் இருக்கிறதா என்ன? இது எல்லையற்ற சந்நியாசம் எனச் சொல்லப்படும். பாபா இதை மட்டும் சொல்கிறார் - அதாவது தேகத்தில் இருந்து மோகத்தை விட்டு விடுங்கள். ஆனால் எதையெல்லாம் இந்தக் கண்களால் பார்க்கிறீர்களோ, அனைத்தையும் மறந்து விடுங்கள். ஏனென்றால் இப்போது திவ்ய திருஷ்டி கிடைத்துள்ளது - அதாவது அனைத்தும் அழிந்து போகும். பழைய உலகம் அழிந்தே விட்டது. புது உலகம் அமையும். சிவபாபா நமக்கு இராஜ்யம் தருகிறார். சிவபாபாவின் பெயர் எப்போதுமே சிவன் என்பது தான். ஏனென்றால் அவருக்குத் தம்முடைய சரீரம் என்பது கிடையாது. பிரம்மா, விஷ்ணு, சங்கருக்கும் கூட அவரவர் சரீரம் உள்ளது. அவர் இருப்பது மேலே. அமர்நாத் அமரர் ஆக்குவதற்கான கதை சொல்கிறார். அமரலோகத்திற்கு அழைத்துச் செல்வதற்காக. குழந்தைகள் நீங்கள் இப்போது மலராகிக் கொண்டிருக்கிறீர்கள். முள்ளையெல்லாம் மலராக மாற்றுவதில் முயற்சி செய்ய வேண்டி உள்ளது. இங்கோ அனைத்தும் முள் தான். ஒருவர் மற்றவரை முள்ளாகக் குத்திக் கொண்டே இருக்கின்றனர். கேட்கவே வேண்டாம். ஆக, இப்போது பாபா சொல்கிறார், நீங்கள் இப்போது யாரையும் முள்ளாகக் குத்தக் கூடாது. காமக் கட்டாரி செலுத்தக் கூடாது. இந்தக் காமத்தின் இம்சை முதல்-இடை-கடை முழுவதும் துக்கம் தருகின்றது. அதுவும் யாரையாவது அடித்தால் உயிரை விட்டு அழிந்து போகின்றனர். இங்கோ ஜென்ம-ஜென்மாந்தரமாக துக்கம் நிறைந்தவராக ஆகிக் கொண்டே இருக்கின்றனர். பாபா சொல்கிறார், இப்போது நீங்கள் காமவிகாரத்தில் ஈடுபடக் கூடாது.

இப்போது நீங்கள் தசரா கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். பிறகு தீபாவளி ஆகி விடுகிறது. சத்யுகத்தில் தீபாவளி கொண்டாட மாட்டார்கள். அங்கே லட்சுமி தாமே இராஜ்யம் செய்வார். பிறகு அவருக்கு உட்கார்ந்து பூஜை செய்ய மாட்டார்கள். கோவில்களில் இருக்கும் மனிதர்கள் (பூஜாரிகள்) தேவதைகளின் வாழ்க்கை வரலாறு பற்றி அறியாதவர்கள். குழந்தைகள் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். குழந்தைகள் நீங்கள் ரூப்-பஸந்த் (யோகி மற்றும் ஞானி). பாபா சொல்கிறார், நானும் கூட சரீரத்தை தாரணை செய்துள்ளேன். ஆனால் நான் தாரணை செய்கின்ற முறையே வேறு. இப்போது உங்களுக்கு

தீபாவளியின் குஷி இருப்பதில்லை. ஏனென்றால் நாம் வனவாசத்தில் இருக்கிறோம். நாம் தந்தை வீட்டில் இருந்து மாமனார் வீட்டுக்குச் செல்கிறோம். பாபா சொல்லியனுப்பி இருந்தார், 108 தையல் உள்ள (கிழிந்த) ஆடையை அணிந்து கொண்டால் தேக அபிமானம் விட்டுப் போகும். இச்சமயம் நீங்கள் முள் நிறைந்த உலகில் இருந்து மலர்களின் உலகத்திற்குச் சென்று கொண்டிருக்கிறீர்கள். எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டிருந்தால் சக்கரவர்த்தி ஆவீர்கள் என்று சொல்வார்கள். பாபா சொல் கிறார், நான் உங்களை நரனிலிருந்து நாராயணனாக ஆக்குகிறேன். ஆகவே கடினமான புருஷார்த்தம் செய்ய வேண்டும். நானே வந்து கற்றுத் தரும் போது பதவியை ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்? தாய்-தந்தையை ஏன் நீங்கள் பின்பற்றுவதில்லை? பாபா சாட்சாத்காரம் செய்வித்திருக்கிறார் - யார் நல்லபடியாகப் படிக்கின்றனரோ, அவர்கள் இராஜகுலத்தில் வருவார்கள். நீங்கள் அறிவீர்கள், சொர்க்கவாசி ஆவதற்காக நாம் படிக்கிறோம். மக்கள் நினைக்கின்றனர், மனிதர்கள் இறந்து போனால் சொர்க்கவாசி ஆகி விடுவார்கள் என்று. நீங்கள் அறிந்திருக்கிறீர்கள், பாபா தான் வந்து சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்கிறார். இராவணன் பிறகு நரகவாசி ஆக்கி விடுகிறான். மனிதர்கள் சொல்கின்றனர், இந்து-சீனீ பாயி-பாயி (இந்தியரும் சீனரும் சகோதரர்கள்) என்று. பிறகு ஒருவர் மற்றவர்க்கு துக்கம் கொடுத்துக் கொண்டே இருக்கின்றனர். நீங்கள் அறிவீர்கள், தாய்-தந்தையிடமிருந்து அளவற்ற சுகம் கிடைத்துக் கொண்டிருக்கிறது. பிறகு மெது-மெதுவாகக் கலைகள் குறைந்து கொண்டே செல் கின்றன. சொல்கின்றனர், உயரும் கலையால் அனைவருக்கும் நன்மை.... ஆக, இப்போது அனைவருக்கும் நன்மை ஏற்படுகிறது. சிலர் நரகத்திலிருந்து வெளியேறி சொர்க்கவாசி ஆகின்றனர். சிலர் சாந்திதாம நிவாசி ஆகின்றனர். அப்போது நன்மை ஏற்படுகிறது இல்லையா? சத்யுகத்தில் துக்கம் தரும் பொருள் எதுவும் இருக்காது. பெரிய மனிதர்களின் ஃபர்னிச்சர் கூட சிறந்ததாக இருக்கும். அங்கே துக்கம் தரும் மிருகங்கள் முதலானவை இருக்காது. ஏனென்றால் ஃபர்னிச்சர் நல்லதாக இருக்க வேண்டும். அது சொர்க்கம் என்று சொல்லப் படுகிறது. அல்லா அவல்தீனின் விளையாட்டு உள்ளது, அதைத் (விளக்கை)தேய்ப்பதால் இராஜ்யம் கிடைக்கிறது. ஆக, அல்லா தந்தை அவல்தீன் அதாவது சநாதன தேவி-தேவதா தர்மத்தை ஸ்தாபனை செய்கிறார். ஆக, பாபா ஒரு விநாடியில் வைகுண்டத்தின் எஜமானவர் ஆக்கி விடுகிறார். பாபா அவல்தீனின் சாட்சாத்காரம் செய்விக்கிறார். சாட்சாத்காரத்தில் சென்றுவிட வேண்டும் என்று குழந்தைகள் சொல்லிவிடக் கூடாது. பாபா சொல்லியிருக்கிறார், தியானியை (டிரான்ஸில் செல்பவர்) விட ஞானி எனக்குப் பிரியமானவர். டிரான்ஸில் மாயா பிரவேசமாகிறது. ஞானத்தில் மாயா வருவதில்லை. யார் தீவிர பக்தி செய்கின்றனரோ, அவர்களுக்கு பாபா சாட்சாத்காரம் செய்விக்கிறார். இங்கே தீவிர பக்தி எதுவும் செய்யப் படுவதில்லை. சின்னச் சின்ன பெண் குழந்தைகளுக்கு சாட்சாத்காரம் ஆகி விடுகிறது. இங்கோ சொல்லப் படுகிறது, டிரான்ஸில் செல்லும் பழக்கம் ஆகிவிடுமானால் படிப்பைப் படிக்க முடியாது. ஆரம்பத்தில் எத்தனைப் பேர் தியானத்தில் சென்று திட்டங்கள் கொண்டு வந்தனர்! ஆனால் அவர்கள் இன்று இல்லை. ஞானம் நிறைந்த ஆத்மாவுக்கு எந்த விஷயத்திலும் சந்தேகம் வராது. சந்தேகம் வந்ததால் படிப்பை விட்டு விட்டனர். அப்போது பாபாவை விட்டு விட்டதாக ஆகி விடும். இப்போது சூரியவம்சி தேவி-தேவதைகளின் இராஜதானி ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. மற்ற தர்ம ஸ்தாபகர்கள் யாரும் இராஜதானியை

ஸ்தாபனை செய்வதில்லை. அவர்களின் தர்மம் எப்போது வளர்ச்சி அடைகின்றதோ, அப்போது இராஜ்யம் நடைபெறுகின்றது. ஆக, நீங்கள் இப்போது உலகத்தின் எஜமானர் ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். புதியவர் யாராவது வந்தால் கேளுங்கள், பரமபிதா பரமாத்மாவோடு உங்களுக்கு என்ன சம்மந்தம்? சொல்வார்கள், பாபா என்று. பாபா சொர்க்கத்தை ஸ்தாபனை செய்கிறார், இராவணன் நரகத்தை உருவாக்குகிறான். யார் சொர்க்கத்தை உருவாக்கினாரோ, அவருக்குப் பூஜை செய்கின்றனர். யார் நரகமாக்கினாரோ அவரை எரிக்கின்றனர். ஏனென்றால் நரகத்தில் மனிதர்கள் காமசிதையில் எரிகின்றனர். அதனால் கோபத்தில் வந்து இராவணனை எரிக்கின்றனர். ஆனால் இராவணன் எரிவதில்லை. பரம்பரையாக எரிக்கப் படுவதாக மட்டும் சொல்லி விடுகின்றனர். ஆனால் பரம்பரை என்பதன் அர்த்தம் அவர்களுக்குத் தெரியாது. விரோதியின் உருவ பொம்மையை எரிப்பார்கள். இராவணனை ஏன் எரிக்கிறீர்கள்? ஏனென்றால் இராவணன் உங்களை எரிக்கிறான். நீங்கள் இராவணனை எரிக்கிறீர்கள். ஆனால் மனிதர்களுக்கு எதுவும் தெரியாது. சத்யுகத்திலோ சம்பூர்ண நிர்விகாரியாக இருப்பார்கள். அதனால் அங்கே இராவணனை எரிப்பதில்லை. அது விகாரமற்ற உலகம் எனச் சொல்லப் படுகின்றது. நாம் சொர்க்கவாசி ஆவதற்காக பாபாவிடம் இருந்து சொர்க்கத்தின் ஆஸ்தியைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். சாபம் கொடுப்பவன் இராவணன். இராவணன் எனச் சொல்லப் படுவது எது? 5 விகாரங்கள் பெண்களுடையவை, 5 விகாரங்கள் ஆண்களுடையவை. சத்யுகத்தில் இந்த விகாரங்கள் இருந்ததில்லை. சந்நியாசி களோ பின்னால் வருகின்றனர். இப்போதோ தேவதா தர்மம் இல்லை. அது மீண்டும் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. 108-இன் மாலை உருவாகிக் கொண்டிருக்கிறது என்றால் பிரஜைகளும் கூட வேண்டும் இல்லையா? ஜெய்ப்பூரின் இராஜா ஒருவர் இருந்தார். பிரஜைகள் எவ்வளவு பேர் இருந்தனர்? இப்போது மாலையோ உருவாகின்றது. பிரஜைகளும் வேண்டும். யார் இங்கே குழந்தைகள் ஆகிப் பிறகு சென்று விடுகின்றனரோ, அவர்கள் சாதாரண பிரஜைகளில் சென்று விடுவார்கள். இல்லறத்தில் இருந்தவாறே ஜீவன்முக்தி வேண்டும் எனச் சொல்கின்றனர். ஜீவன்முக்தி அடைந்தவராக ஒருவர் மட்டும் இருக்க மாட்டார்கள். முழு குலமும் வேண்டும். ஒரு விநாடியில் ஜீவன்முக்தி கிடைத்தது என அஷ்டாவக்ர கீதையில் எழுதப் பட்டுள்ளது. ஆனால் எப்படிக் கிடைத்தது? அவர்களுக்குத் தெரியாது. ஆதி சநாதன தேவி-தேவதா தர்மம் மிகுந்த சுகம் தரக் கூடியது. இராஜ்யம் கிடைத்துக் கொண்டிருக்கிறது என்றால் பிறகு நாம் ஏன் ஸ்ரீமத் படி நடக்கக் கூடாது? தாமரை மலருக்கு சமமாக ஏன் ஆகக் கூடாது? நீங்கள் பிராமணர்கள் இல்லையா? ஆகவே சங்கு, சக்கரம், கதை, தாமரை உங்களிடம் உள்ளன.

மனிதர்கள் தீபாவளி அன்று ஒரு நாள் மட்டும் புத்தாடை அணிகின்றனர், கோவில்களுக்குச் செல்கின்றனர். கிருஷ்ண ஜென்மாஷ்டமி அன்று புத்தாடை அணிவதில்லை. தீபாவளி நாளில் புத்தாடை அணிகின்றனர். ஒவ்வொன்றும் அன்றைய தினம் புதிது. அன்றைய நாளில் கடைக் காரர்கள் தங்களின் பழைய கணக்கை முடித்துப் புதிய கணக்கைத் தொடங்குகின்றனர். நீங்களும் இப்போது பழைய கணக்கை முடித்து விட்டுப் புதியதைத் தொடங்கிக் கொண்டிருக்கிறீர்கள். பாபா லாபம் கிடைக்கச் செய்கிறார் இராவணன் நஷ்டத்தை ஏற்படுத்து கிறான். லாபம் எப்படி ஏற்படும்? மன்மனாபவ, மத்யாஜீபவ. விஷ்ணு மத்தியில் உள்ளவர் இல்லையா? மத்யாஜீபவ என்றால்

பாபா, பிரம்மா மூலம் விஷ்ணுபுரி ஸ்தாபனை செய்கிறார். ஆகவே பழைய உலகம் அழிந்து போகிறது. ஆக, சிவபாபா கலியுகத்தின் கடைசியில் வருகிறார். பிறகு சத்யுகத்தின் ஆரம்பம் வருகிறது. எழுதப் பட்டும் உள்ளது - பிரம்மாவின் மூலம் ஸ்தாபனை. பிரம்மாவோ பிரஜாபிதா இல்லையா? ஆக, நீங்கள் யாருடைய குழந்தைகள்? சிவனுடையவர்களா அல்லது பிரம்மாவுடைய குழந்தைகளா? சொல்லவும் செய்கின்றனர், நீங்கள் தாயும் தந்தையுமாக இருக்கிறீர்கள்..... நிச்சயமாக நடைமுறையில் தாய்-தந்தை இப்போது உள்ளனர். படிப்பைப் படித்துப் பிறகு ஆஸ்தி அடைந்து கொண்டிருக்கிறீர்கள்.

பிறகு இராவணன் வந்து துக்கமுள்ளவராக ஆக்குகிறான். துக்கமும் கொஞ்சம்-கொஞ்சமாக அதிகரிக்கிறது. விஷக்கடல் இந்தக் கலியுகம். சத்யுகம் என்பது பாற்கடல். விஷ்ணுவைப் பாற்கடலில் காண்பிக்கின்றனர். நீங்கள் அறிவீர்கள் நிச்சயமாக, அவர்களுக்கு தசரா, தீபாவளி பற்றி என்ன தெரியும்? நாமோ இரகசியத்தைப் புரிந்து கொண்டோம். நீங்கள் அறிவீர்கள், நேற்று நாம் சொர்க்கத்தில் இருந்தோம். நேற்று என்று ஏன் சொல்கிறோம்? ஏனென்றால் இரவுக்குப் பின் பகல் வரும். யாராவது வந்தால் கேளுங்கள், இந்த ஆசிரமம் யாருடையது? பிரஜாபிதா பிரம்மா என்ற பெயரைக் கேட்டிருக்கிறீர்களா? இவ்வளவு பிரம்மாகுமார் குமாரிகள் உள்ளனர் என்றால் பிரம்மா தந்தை ஆகிறார். தந்தையிடமிருந்து ஆஸ்தி தான் கிடைக்கும். தந்தை சொல்கிறார், என்னை நினைவு செய்வீர்களானால் மத்யாஜீபவ. பாபா தொழில் செய்வதற்குத் தடை சொல்லவில்லை. பாபா சொல்கிறார், உங்கள் வேலையை வேண்டுமானால் செய்யுங்கள். ஆனால் பாபாவை நினைவு செய்யுங்கள். ஏனென்றால் அவரிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறது. இது பக்தி பூர்வமான பயம் இல்லையா? மற்ற இடங்களில் பயம் கிடையாது. பள்ளிக்கூடத்தில் கூட பயம் உள்ளது. அதனால் தான் சொல்கின்றனர், மாணவ வாழ்க்கை தான் அனைத்திலும் சிறந்தது என்று. இது எல்லையற்ற படிப்பு. எல்லையற்ற சரித்திர-பூகோளத்தை நீங்கள் அறிவீர்கள். பள்ளிக்கூடங்களில் போய்ச் சொல்லுங்கள், எல்லையற்ற சரித்திர-பூகோளம் என்பது என்ன என்று. அவர்களுக்குச் சொல்ல வேண்டும், நீங்களோ, எல்லைக்குட்பட்ட சரித்திர-பூகோளம் படிக்கிறீர்கள். நாங்கள் உங்களுக்கு லட்சுமி-நாராயணரின் எல்லையற்ற சரித்திர-பூகோளத்தைச் சொல்கிறோம், அதாவது லட்சுமி-நாராயணர் இந்தப் பதவியை எப்படி அடைந்தனர்? இன்னும் போனால் உங்களுக்குக் கல்லூரிகளில் இருந்தும் கூட அழைப்பு வரும். இது ஈஸ்வரிய விஷ்வ வித்யாலயா. அவர் ஆன்மிகத் தந்தை. ஆக, ஆத்மாக்களுக்கு ஆன்மிக ஞானம் தருகிறார். நிராகார், சாகாரில் வந்து சொல்கிறார். இதில் கிருஷ்ணருடைய விஷயமோ எதுவும் கிடையாது. எந்த ஒரு விஷயத்தையும் புரிந்து கொள்வதில்லை. குழம்பிப் போயுள்ளனர். சுதந்திரமடைய விரும்புகின்றனர். ஆனால் சண்டை அதிகரித்துக் கொண்டே உள்ளது. சுதந்திரம் வேண்டும் எனச் சொல்கின்றனர். உண்மையிலும் உண்மை யான சுதந்திரம் உங்களுக்கு இராவணனிடம் இருந்து கிடைக்கிறது. நாம் கிறிஸ்தவர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்றோம் என்று பாரதவாசிகள் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் சுதந்திரம் எங்கே இருக்கிறது? சுதந்திரம் உங்களுக்குக் கிடைக்கிறது, சுதந்திரமான இராஜ்யம். பாடலைக் கேட்டீர் கள் இல்லையா, நீங்கள் கிடைத்தால் பூமி, ஆகாயம், கடல் அனைத்தும் எங்களுடையதாக ஆகி விடும்.

அதில் எல்லை இருக்காது. நல்லது.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப் பட்ட குழந்தைகளுக்கு தாய்-தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தாய்-தந்தையை முழுமையாகப் பின்பற்றி, படிப்பில் உயர்ந்த பதவி பெற வேண்டும். இந்த உலகத்தில் எந்த ஓர் பற்றையும் வைக்கக் கூடாது. வனவாசத்தில் இருக்க வேண்டும்.

2. இந்தக் கண்களால் என்னென்ன காணப்படுகிறதோ, அதையெல்லாம் பார்த்தாலும் பார்க்காதிருக்க வேண்டும். முழு நஷ்டோமோகா (பற்றற்றவர்) ஆக வேண்டும். சங்கம யுகத்தில் எதையும் வீணாக்கக் கூடாது.

வரதானம் : தன்னுடைய தொழிலின் நினைவின் மூலம் சேவையினுடைய பலன் மற்றும் பலத்தை பெறக்கூடிய விஷ்வ கல்யாணகாரி ஆகுக.

எந்தவொரு வேலை செய்யும்பொழுதும் தன்னுடைய தொழிலை மறக்காதீர்கள். எவ்வாறு பாண்டவர்கள் மறைமுகமான வேடத்தில் வேலை செய்தார்கள், ஆனால், வெற்றியின் போதை இருந்தது. நீங்கள் அதைப்போன்று அரசு ஊழியராக இருக்கின்றீர்கள், வேலை செய்கின்றீர்கள், ஆனால், நான் விஷ்வ கல்யாணகாரி என்ற போதை இருக்க வேண்டும். இந்த நினைவினால் தானாகவே சக்திசாலியாக இருப்பீர்கள் மற்றும் சதா சேவை உணர்வு இருக்கும் காரணத்தினால் சேவையின் பலன் மற்றும் பலம் கிடைத்துக் கொண்டே இருக்கும். பாவனைக்கான பலன் கிடைக்கிறது என்ற மகிமை உள்ளது, எனவே, உங்களுடைய சேவை பாவனை அனேக ஆத்மாக்களுக்கு சாந்தி, சக்தியின் பலன் கொடுக்கும்.

சுலோகன்: இறை மாணவ சொரூபம் சதா நினைவில் இருந்தது என்றால், மாயை வரமுடியாது